**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 8/2025**

**Date : 10.06.2026**

**வா.சா. 1 - சார்லஸ்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் இவ்வழக்கில் 1ம் வாதி என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதிகள் என்னுடைய சித்தப்பாவின் பிள்ளைகள் என்றால் சரிதான். எனக்கும் பிரதிவாதிகளுக்கும் எவ்வளவு காலமாக நல்லுரவு இல்லை என்றால் பாதை அடைத்த பின்பு 2024 லிலிருந்து. மேற்படி பாதையை அடைத்தது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் புகார் கொடுத்துள்ளேன். யாருக்கு எதிராக மேற்படி புகார் கொடுத்தேன் என்றால் 1ம் பிரதிவாதிக்கு எதிராக. மேற்படி புகாரின் பேரில் விசாரனை மேற்கொள்ளப்பட்டதா என்றால் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி விசாரணை அல்லது பேச்சுவார்த்தை எப்போது, எங்கே மேற்கொள்ளப்பட்டது என்றால் 20.08.2024 காவல் நிலையத்தில்.

எனது தாத்தா வியாகப்ப நாடாருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 5 ஆண்கள் 2 பெண்கள். மேற்படி வாரிசுகள் அனைவரும் இவ்வழக்கில் முக்கியமான தரப்பினர் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தான 69 சென்ட் எனது தாத்தாவிற்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எனது தாத்தாவின் தந்தையார் கொடுத்தது. மேற்படி சொத்து எனது தாத்தாவிற்கு உரிமைப்பட்டதாக காட்டுவதற்கு ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. எனது தாத்தாவிற்கு எவ்வாறு உரிமைப்பட்டது உரிமைப்பட்டதாக காட்டுவதற்கு ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி சொத்தின் தலா 23 சென்ட்டாக தாத்தாவின் 3 மகன்களுக்கு எனது தாத்தாவால் கொடுக்கப்பட்டது என்றால்

சரிதான்.

எனது தாத்தாவும் பாட்டியும் சேர்ந்து எழுதிய உயில் பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் வழக்கு பட்டைிகை சொத்து எனது தாத்தாவிற்கு மட்டும் உரிமைப்பட்டிருந்ததா அல்லது பாட்டிக்கும் சேர்த்து உரிமைப்பட்டிருந்ததா என்பது குறித்து வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் எனது பாட்டிக்கு உரிமையிருந்திருந்ததா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது தாத்தா அவரின் 3 மகன்களுக்கும் வழக்கு பட்டிகை சொத்தான 69 சென்ட்டை 3 பங்காக பிரித்து வைத்த பின்பு தான் உயில் எழுதினார் என்றால் சரிதான். மேற்கற்றம் 23 சென்ட் எனது பெரியப்பா மனுவேலுவிற்கும், அதனை தொட்டு கிழக்கு பக்கம் உள்ளது எனது அப்பாவிற்கும், அதனை தொட்டு கிழக்கு பக்கம் உள்ள சொத்து எனது சித்தப்பா ரத்தனத்திற்கும் என்றால் சரிதான்.

மேற்படி தலா 23 சென்ட்டில் உரிமையை பொறுத்து மேற்படி மூவருக்கும் எவ்வித தாவாவும் இல்லை என்றால் சரிதான். மேற்படி தலா 23 சென்ட்டில் உரிமையை பொறுத்து மேற்படி மூவரை தவிர யாவருக்கும் எவ்வித உரிமையையும் இல்லை என்றால் சரிதான். மேற்படி 69 சென்டிற்கும் சரியாக எல்கைகள் குறிக்கப்பட்டு உள்ளது எல்கையை குறித்த தாவா எதுவும் இ,ல்லை என்றாால் சரிதான். நான் வழக்குரையில் வழக்கு பட்டிகை சொத்து 71.250 சென்ட் என்று கூறியிருப்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வழக்கு பட்டிகை சொத்து 71.250 சென்ட் என்று கூறியிருப்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் இல்லை என்றால் சரிதான் கிடப்புபடி உள்ளது.

நான் மேற்படி தலா 23 சென்ட்டில் உரிமையை பொறுத்து மேற்படி மூவரும் சரியாக

வரி செலுத்தி வருகிறோமா என்றால் நான் செலுத்தி வருகிறேன். நான் எனது சொத்தினை உட்பிரிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு தனிப்பட்டா இல்லை என்றால் சரிதான். மேற்படி 69 சென்ட் ஏதேனும் கட்டிடம் உள்ளதா என்றால் வழக்கு சி பட்டிகை சொத்தில் மட்டும் பாதையை அடைத்து காம்பவுண்ட் உள்ளது. மேற்படி காம்பவுண்ட் எப்போது கட்டினார்கள் என்றால் 2024.

மேற்படி காம்பவுண்ட் சுவர் கட்டும்போது நான் ஊரில் உண்டு என்றால் சரியல்ல. சென்னையில் இருந்தேன். 16.08.2024 அன்று வந்து பார்த்த போது கட்டப்பட்டுயிருந்தது. இவ்வழக்கில் 2ம் வாதி வழக்கு பட்டிகை சொத்தில் அருகில் தான் உள்ளார் என்றால் சரிதான். நான் சென்னையிலிருந்து வந்து பார்த்தபின்பு மேற்படி காம்பவுண்ட் சுவர் எப்போது கட்டப்பட்டது என்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன், 2024. நான் காவல் நிலையத்தில் கொடுத்ததாக கூறக்கூடிய புகாரில் மேற்படி காம்பவுண்ட் சுவர் எப்போது யாரால் கட்டப்பட்டது என்ற விவரம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். பாதையை அடைத்து கட்டியுள்ளதாக கூறினேன். எதனை வைத்து அடைத்துள்ளார்கள் என்றால் கீழே கருங்கல் மேலே ஹாலோபிளாக்ஸ். மேற்படி கருங்கல் அஸ்திவாரம் எத்தனை நீளத்திற்கு உள்ளது என்றால் சுமார் 30 அடி நீளம் வைத்து அடைத்துள்ளார். மேற்படி ஹாலோபிளாக் எத்தனை அடி உயரத்தில் இருக்கிறது என்றால் சுமார் 5 அடி, மேற்படி கருங்கல் ரப்பிள் ஒர்க்கை பார்த்தாலே சுமார் 5 வருடத்திற்கு முன்பு கட்டப்பட்டுள்ளதாக தெரியும் என்றால் சரியல்ல.

மேற்படி அஸ்திவாரத்தில் பிளாஸ்டர் போட்டு சிமென்ட் பூசப்பட்டுள்ளதா என்றால் பூசப்பட்டுள்ளது. மேற்படி காம்பவுண்ட் சுவர் சம்மந்தமான அனைத்து வேலைகளும் எத்தனை நாட்கள் நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான்

கொடுத்த புகார் மனுவின் ரசிதோ சிஎஸ்ஆர் நகலோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் நல்ல உறவு இருந்தது ஆகையால் அவர்களிடம் சென்று காம்பவுண்ட் சுவர் குறித்து கேட்டேனா என்றால் கேட்டோம், நானும் 2 வது வாதியின் கணவரும் 1ம் பிரதிவாதியிடம் கேட்டோம். மேற்படி அனைத்து விவரங்களையும் நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி 69 சென்ட் கிழக்கு பக்கம் உள்ள சென்ட் ஆதியில் யாருக்க உரிமைப்பட்டிருந்தது என்றால் தெரியாது. மேற்படி 69 சென்ட் கிழக்கு பக்கம் உள்ள சென்ட்டின் சர்வே எண் என்ன என்றால் 639/13. மேற்படி 69 சென்ட் கிழக்கு பக்கம் உள்ள சென்ட்டின் விஸ்திரணம் என்ன என்றால் தெரியாது.

மேற்படி 69 சென்ட்டிற்கும் மற்றும் தலா 23 சென்டிற்கும் எல்கைகள் உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 69 சென்டின் புதிய சர்வே எண் என்ன என்றால் 633/13. பழைய சர்வே எண் என்ன என்றால் தெரியாது. வாசாஆ 2 புதிய சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி 69 சென்ட் கிழக்கு பக்கம் உள்ள சென்ட்டில் எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. மேற்படி 69 சென்ட் கிழக்கு பக்கம் உள்ள சென்ட்டில் எனக்கு உரிமையிருப்பதற்காக ஆவணங்கள் பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி ஆவணம் என்னிடம் உள்ளது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால் சரிதான்.

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்க ஒத்தி வைக்கப்படுகிறது.**